9) ‘‘காட்சிப்படிமங்கள் மூலம் சொல்லக் கூடிய ஒன்றை வார்த்தை மூலம் கூற முயன்றால் சினிமா சீரழியும்’’
அ) இக்கூற்றைக் கூறியவர் யார்?
ஆ) இக்கட்டுரையின் ஆசிரியர் யார்?

10) சூழும் மாயவுலகினில் காணும் தோற்றம் யாவும் மாணதம் ஆகுமாதலால்
அ) பாரதி காணும் உலகம் எப்படிப்பட்டது?
ஆ) மாணதம் என்பதன் கருதது யாது?

2. பின்வரும் செய்யுட் பகுதிகளையும், உரைப் பகுதிகளையும் வாசித்து தரப்பட்ட வினாக்களுக்கு விடை எழுதுக.

1) அடக்கம் உடையார் அறிவிலர் என்று எண்ணிக்
கடக்க கருதவும் வேண்டா மடைத்தலையில்
ஓடுமீன் ஓட உறுமீன் வருமளவும் வாடி இருக்குமாம்
அ) இப்பாடலில் கூறப்படும் நீதிக் கருத்து யாது?
ஆ) இங்கு இடம்பெற்றுள்ள அணியை குறிப்பிட்டு விளக்குக.

2) புலங்க ளோடு கரணமும் ஆவியும்
போந்து நின்ற விருப்புடன் மானிடன்
நலங்க ளேது விரும்புவன் அங்கவை
தண்ணு றப்பெறல் திண்ணம தாமென,
இலங்கு நூலுணர் ஞானியர் கூறுவர்
யானும் மற்றது மெய்யெனத் தேர்ந்துள்ளேன்
விலங்கி யற்கை யிலையெனில் யாமெலாம்
விரும்பு மட்டினில் விண்ணுற லாகுமே
அ) மானிடர் விரும்பியவற்றை அடையும் வழிகை எவையென ஞானியர் குறிப்பிடுகின்றனர்?
ஆ) ‘விலங்கியற்றை’ என்ற தொடரின் மூலம் நீர் விளங்கிக் கொள்வது யாது?

3) சுழித்து நீர்வரு துறையாற்றை, சூழ்படை
கழித்து நீக்கியதென, கள்ள வாசையை
யழித்து, வேறுஅவனி பண்டாண்டவேந்தரை
யழித்து, மேலேறி னான்றானு மேறினான்
அ) இப்பாடலில் அணிச்சிறப்பை விளக்குக.
ஆ) பரதன் எவ்வாறு சிறப்பிக்கப்படுகின்றான்?

4) ‘‘சினிமா, கமராவினால் பதிவு செய்யப்பட்ட பல்சுவை நிகழ்ச்சியல்ல. எந்த ஒரு படத்திலும் இழையோடும் ஒரு மையக்கரு ஒன்று இருக்கும். இந்தக் கருவைச் சாராத எந்தக் காட்சிப் படிமத்திற்கும், ஒலிக்கும் அப் படதில் இடமில்லை. அப்படிச் சம்பந்தமில்லாத காடசி வந்தால் அது சினிமாவாக இல்லாமல் படமாக்கப்பட்ட பல்சுவை நிகழ்ச்சி ஆகின்றது. சினிமா, வாய்ப்பேச்சால் வார்த்தைகளால் சொல்லப்படுவதல்ல. அப்படி இருந்தால் அதற்கு ஒரு திரை தேவையிருக்காது. ஒலி நாடாவிலோ வானொலியிலோ கேட்டுத் திருப்தியடைய முடியும்’’
அ) இங்கு நல்ல சினிமாவின் சிறப்புக்களாகக் குறிப்பிடப்படுவன யாவை?
ஆ) ஒரு சினிமா எப்போது பல்சுவை நிகழ்ச்சியாகின்றது?



kalvi.lk

5) ‘‘வாதத்துக்கென்று வந்தவர்கள் இருந்தே விட்டார்கள். எழுந்தவர்கள் வேறு வியாசம் பண்ணிக்கொண்டு வெளியே போய்விட்டார்கள். போனவர்கள் பின் உள்ளே வரவில்லை தப்பித்துக் கொள்ள வழிவகையின்றி தம்மை அறியாமலே வாய்குழறி அகப்பட்டுக்கொண்டவர்கள் தமது உடல் நடுங்க நாத் தழுதழுத்து ‘பிறிற்றோ தக்கவர் அல்லர்’ என்று தாமே சொல்லிச் சமாதானப்பட்டுக் கொண்டார்கள். அன்று நடந்த நிகழ்ச்சியோடு பிரிற்றோவின் பிரதிநிதித்துவக் கதை நின்று விட்டது’’

அ) கூட்ட மண்டபத்தில் உண்டான மாற்றத்தை கட்டுரையாசிரியர் எவ்விதம் எள்ளி நகையாடுகின்றார்?

ஆ) பிரிற்றோவின் பிரதிநித்துவக் கதை நின்றமைக்கான காரணம் யாது?

(20 புள்ளி)

3. ‘கம்பியூட்டர்’ என்ற சிறுகதையில்
அ) கம்பியூட்டர் பற்றி விவரிப்பன
ஆ) உத்தி முறைகள்
என்பவற்றைத் தெளிவுறுத்துக.

அல்லது

‘குகப்படலத்தில்’ பரதன் குகனுக்கு,
அ) கோசலை
ஆ) சுமித்திரை ஆகியோரை அறிமுகம் செய்யும் பாங்கினை விளக்குக. (5 புள்ளி)

4. நாவலர் எழுந்தார் என்ற கட்டுரையை அடிப்படையாக கொண்டு
அ) நாவலரின் குணப்பண்புகள்
ஆ) பிறிற்றோவின் நேர்மையற்ற செயல்
இ) பண்டிதமணியின் கதை விபரிப்பு என்பவற்றை விளக்குக.

அல்லது

எது நல்ல சினிமா என்ற கட்டுரையில்
அ) நல்லதொரு சினிமாவில் உள்ளடங்க வேண்டியவை யாவை?
ஆ) கட்டுரையாசிரியரின் மொழிநடை சிறப்பினை விபரிக்குக. (15 புள்ளி)

5. குற்றாலக் குறுவஞ்சி என்ற பாடப் பகுதியில்
அ) இயற்கை வளங்கள் எடுத்துரைக்கப்படுமாறு
ஆ) நாட்டுச்சிறப்பு எடுத்துரைக்கப்படுமாறு என்பது பற்றி எடுத்துக் கூறுக.

6. நீதிப் பாடல்கள் என்ற பகுதியில் வெற்றிவேட்கை, நாலடியார் என்பவற்றில் கூறப்படும் நீதிக் கருத்துக்களை விளக்குக.

7. ‘நாட்டார் பாடல்கள்’ என்ற பகுதியில்
அ) காதற்பாடலில் ஆழமான காதல் உணர்வுகளும்
ஆ) ஏர்ப்பாடலின் மூலம் நல்ல சிந்தனைகளும் முன்வைக்கப்பட்டிருக்குமாற்றினை விளக்குக.

(10 புள்ளி)

இவ் வினாப்பத்திரம் சகல சுகாதார பாதுகாப்பு நடைமுறைகளை பின்பற்றி சுகாதார அமைச்சின் வழிகாட்டல்களின் படி அச்சிட்டு, பொதி செய்செய்யப்பட்டு விநியோகிக்கப்பட்டது



kalvi.lk

This document was created with Win2PDF available at http://www.win2pdf.com.
The unregistered version of Win2PDF is for evaluation or non-commercial use only.
This page will not be added after purchasing Win2PDF.

# 2025

## 1ம் தவணை வகுப்புகள்

**தரம் 6 முதல் 11 வரையான மாணவர்களிற்கான தமிழ் மற்றும் ஆங்கில மொழிமூல வகுப்புக்கள் ஆரம்பமாகவுள்ளன.**

**ஆரம்பம் 01.01.2025**

இலங்கையின் எப்பாகத்திலிருந்தும்
Zoom app மூலம் எமது வகுப்புகளில்
இணைந்து கொள்ள முடியும்.

அனைத்துப் பாடங்களும் ஒரே கல்வி நிறுவனத்தின் கீழ்...

Education கல்வி අධ්‍යාපන Kalvi.lk

**Whatsapp**
**075 287 1457**